# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| STC.No. 69/2025 | LW– 1 | PW– 1 | |
| Name | : குமார் ( புகார்தாரர்) | | |
| Father's/Husband's Name | : முத்துச்சாமி | | |
| Village | : மேட்டுப்பட்டி | | |
| Taluk | : மணப்பாறை | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 27/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of October 2025

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பொலிரோ பிக்கப் வேன் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியை நான் பார்த்ததில்லை. ஆனால் அவர் பெயர் முத்துக்குமார் என்று கேள்விப்பட்டேன். கடந்த 19.08.2024ம் தேதி இரவு 2.30 முதல் 3.00 மணியளவில் மேட்டுப்பட்டியிலிருந்து திருப்பூர் சென்று குன்னாரம்பட்டியில் உள்ள நண்பரின் வீட்டு சாமான்களை ஏற்றிக் கொண்டு திருப்பூரிலிருந்து வந்து கொண்டிருந்தபோது, அம்மாபட்டி விலக்கு வலது புறத்தில் இண்டிகேட்டர் போட்டு போகும்போது எங்களுக்கு பின்புறமாக இருந்து வந்த டூரிஸ்ட் பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தியது. அதில் எங்கள் வாகனம் இரண்டு முறை உருண்டு பக்கத்தில் இருந்த வேப்பமரத்தில் மோதி கீழே விழுந்தது. அப்போது எங்கள் வாகனத்திலிருந்த எனக்கும், என் நண்பர் மதுரைவீரன் என்பவருக்கும் காயம்

ஏற்பட்டது. அதில் எனக்கு இடது பக்க நெஞ்சில் ரத்தம் உறைந்துவிட்டது. வலது கால் பாதத்திற்கு மேல் பலத்த வெட்டுக் காயம் ஏற்பட்டு எலும்பு தேய்ந்துவிட்டது. மேலும் என் தலையில் உடைந்த கண்ணாடிகள் குத்தியது. தலையில் பல இடங்களில் கண்ணாடி குத்தி காயங்கள் இருந்தது. என் முதுகில் பலத்த வெட்டுக் காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டுள்ளது. **(சாட்சி தனது வலது கால் மற்றும் முதுகில் உள்ள காயத்தழும்பை காண்பித்தார்.)** என்னுடன் வந்த மதுரைவீரன் என்பவருக்கு தலையின் பல இடங்களில் கண்ணாடி குத்தி ரத்த காயங்கள் இருந்தது. காயம் ஏற்பட்டு நான் வேனின் அடியில் கிடந்தபோது என் வீட்டிற்கு போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு மயக்கமாகிவிட்டேன்.

2) பின்னர் மயக்கம் தெளிந்து பார்த்தபோது நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் ஓட்டிச் சென்ற பொலிரோ பிக்கப் வேனின் பதிவு எண். TN 36 AE 6475 ஆகும். எங்கள் வாகனத்தின் மீது மோதிய பேருந்து பச்சை கலரில் இருந்தது. அது கோயம்புத்தூரில் இருந்து வந்ததாக சொன்னார்கள். என்னை நத்தம் அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அதன் பிறகு போலீசார் என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து எழுதிக் கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் சொல்லச் சொல்ல போலீசார் எழுதியது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்த அன்றைய தினம் மாலையில் போன் மூலம் என்னிடம் நீங்கள் கேஸ் கொடுத்திருக்கிறீர்கள், இருவர் மீதும் தப்பு இருக்கிறது, கேஸை முடித்துக் கொள்ளலாம் என்று கூறினார். நான் அதற்கு மறுத்துவிட்டேன். எங்கள் மீது தப்பு இல்லை, நான் புகார் கொடுத்துவிட்டு வழக்கை பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன். போலீசார் என்னை

விசாரித்தனர். திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடித்து மணப்பாறை குமரன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். 6 மாதங்கள் வரை தனியார் மருத்துவமனையில் மருந்துகள் எடுத்துக் கொண்டேன். மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயத்தால் தற்போது வரை என்னால் வண்டி ஓட்ட இயலவில்லை, வீட்டில்தான் உள்ளேன், மிகவும் சிரமப்படுகிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

3) போலீசார் என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மறு நாள் விசாரித்தார்கள் என்றால் சரிதான். மறுநாள் தான் நான் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். போலீசார் என்னை வேறொரு தேதியில் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று கையொப்பம் பெற்றதாக தெரிவித்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது ஊர் மணப்பாறை என்றாலும், எனது நண்பர் மதுரைவீரன் ஊர் பாலமேடு என்றாலும் சரிதான். எனது நண்பர் மதுரைவீரன் திருப்பூரில் வேலை செய்து வந்தார். மதுரைவீரன் என்பவரை தவிர யாரும் எனது வாகனத்தில் வரவில்லை என்றால் சரியல்ல, பாலமுருகன் என்பவரும் வந்தார். பாலமுருகனுக்கு காயம் எதுவும் இல்லை. பாலமுருகனுக்கு பாலமேடு சொந்த ஊர் கிடையாது என்றால் சரிதான். பாலமுருகன் வீட்டு சாமானை திருப்பூரிலிருந்து ஏற்றிக்கொண்டு அவர் வீடான குன்னாரம்பட்டிக்கு நாங்கள் வந்தோம் என்றால் சரிதான்.

4) சம்பவ இடமானது அம்மாபட்டி பிரிவிற்கு செல்வதற்காக மேற்கிலிருந்து கிழக்காக சென்று வலதுபுறமாக தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது வாகனத்தின் பின்புறம் இருந்த இண்டிகேட்டர் எரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சமயம் நான் இண்டிகேட்டர் போட்டதாக சொல்வதும் பொய் என்றாலும், இண்டிகேட்டர் எரியவில்லை என்றாலும் சரியல்ல. சாலையின் மொத்த அகலம் 100 அடி இருக்கும் என்றால் சரியல்ல, 20

அடி இருக்கும். அது ஒரு தேசிய நெடுஞ்சாலை என்றால் அது பற்றி தெரியாது. சம்பவ இடமானது தேசிய நெடுஞ்சாலை என்றாலும் அதன் அகலம் 100 அடி இருக்கும் என்றாலும் இரவு நேரத்தில் நான்தான் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் செயல்பட்டு ரோட்டின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி திடீரென திருப்பியதால்தான் விபத்து ஏற்பட்டு எனது வாகனம் பள்ளத்தில் விழுந்தது என்றால் சரியல்ல.

5) நான் விபத்து நடந்த பகுதிக்கு இதற்கு முன்பு வந்தது இல்லை என்றால் சரிதான். எனக்கு அந்த இடம் பற்றி தெரியாது என்பதால் தான் அம்மாபட்டி பிரிவில் திடீரென திரும்பினேன் என்றால் சரியல்ல. எதிரி முத்துக்குமாரை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் முத்துக்குமார் என்பவர் எனக்கு போனில் பேசியது வைத்து தெரியும், நான் சொல்வது போல் முத்துக்குமார் எனக்கு போனில் தொடர்பு கொள்ளவில்லை என்றாலும், பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பேருந்து கோயம்புத்தூரில் இருந்து வந்தது என்பதும், பச்சை நிற பேருந்து என்பதும் யார் சொல்லி தெரியும் என்றால் மதுரைவீரன் சொல்லி தெரியும். பேருந்தின் நிறம் மற்றும் மதுரை வீரன் சொல்லி விபரங்கள் தெரியும் என்ற விபரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த விபரங்களை எழுதாமல் போலீசார் விட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

6) நான் எனது முதல் விசாரணையில் சொல்லிய காயங்களான வலது பக்க நெஞ்சில் காயம் ஏற்பட்டதாகதான் போலீசார் விசாரிக்கும் போதும் சொன்னேன் என்றால் சரிதான். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டதாக மிகைப்படுத்தி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மதுரை வீரன் என்பவருக்கும், எதிரியால் காயம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்தானது முழுக்க முழுக்க எனது கவனக் குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு பின்னால் வந்த வாகனத்தை எனது முன் பக்க கண்ணாடி மூலமாகவோ அல்லது வேறு

விதமாகவோ பார்க்கவில்லை என்றால் சரிதான், நான் கண்ணாடியில் பார்க்கும் பொழுது பின்புறம் எந்த வண்டியும் வரவில்லை, இரு சக்கர வாகனம் தான் சென்றது. எனது வண்டிக்கு பின்புறம் எந்த வாகனத்தையும் நான் பார்க்காத நிலையில் கனரக வாகனத்தை எதிரி வண்டி ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

7) நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், விபத்து இழப்பீடு பெறுவதற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருப்பூரில் இருந்து நாங்கள் வரும்பொழுது நானும் மதுரை வீரன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் மது அருந்தி வந்தோம் என்றாலும், அதனால்தான் யார் பொருட்களை ஏற்றி, இறக்கி வைக்க வந்தோம் என்ற விபரத்தை சரியாக சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மற்றும் மதுரைவீரனுக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் அனைத்தும் நான் கவன குறைவாக வாகனம் ஓட்டி விபத்து ஏற்படுத்தி அதில் வாகனம் இரண்டு முறை உருண்டதால்தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மணப்பாறை குமரன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட விபரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் அதற்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்காததால் சொல்ல இயலவில்லை. எனது கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.23 23:22:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்